தலைவி ஆட்சிக் காலத்திலே தீர்க்க வேண்டுமென்று எதிர்க்கட்சி உறுப்பினர்களும் எண்ணுகிறார்கள். ஆளும் கட்சி உறுப்பினர்களும் எண்ணுகிறார்கள். அதற்கேற்பத்தான் இன்றைக்கு நெடுஞ்சாலைத் துறையிலே பல்வேறு புரட்சிகரமான திட்டங்களை நம்முடைய புரட்சித் தலைவி ஆட்சிக் காலத்திலே தீட்டி எந்த அரசும் அதாவது காங்கிரஸ் அரசாக இருந்தாலும் சரி தி.மு.க. அரசாக இருந்தாலும் சரி யாரும் செய்யாத அளவுக்கு இரண்டு மடங்காக நிதி ஒதுக்கீடுகளைச் செய்து வேண்டியன செய்துகொண்டு இருக்கிறோம்.

ஆனால் தமிழ்நாடு முழுவதும் இருக்கிற பாலங்களைக் கட்ட வேண்டுமென்று சொன்னால் சாலைகளைப் போட வேண்டும் என்று சொன்னால் பல ஆயிரம் கோடி ரூபாய் தேவைப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர்கள் அறிவார்கள். இருக்கிற நிதியாதாரங்களை வைத்து ஏற்கெனவே போக்குவரத்து வசதியே இல்லாத இடங்களில் உரிய ஏற்பாடு செய்து அவற்றை மேம்படுத்த வேண்டும்; இல்லாத இடங்களுக்கு பாலம் கட்ட வேண்டும் என்பதுதான் இந்த அரசினுடைய முதல் குறிக்கோள். இருக்கின்ற பாலங்களை மேம்படுத்த வேண்டும் என்பது இரண்டாவது குறிக்கோள். ஆகவேதான் முன்னுரிமை கொடுத்து செய்யப்படுகிற அடிப்படையில் இது வரவில்லை என்பதை நான் தெரிவித்தேன். ஆகவே மலைவாழ் மக்களின் மீதும் ஏழை எளிய அரிசன மக்களின் மீதும் இந்த அரசு கொண்டிருக்கிற அளவுக்கு எந்த அரசும் அக்கறை கொண்டிருக்கவில்லை என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன். மலைவாழ் மக்களுக்குச் சாலை வசதி செய்து தருவதற்காக பல கோடி ரூபாய்க்கு பல்வேறு திட்டங்களை நம்முடைய புரட்சித் தலைவி அவர்கள் வழங்கி இருக்கிறார்கள். அதனை மானியக் கோரிக்கையிலே தெரிவிப்பேன் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன். ஆகவே இந்த அரசு அதற்கான முயற்சிகளையும் நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 131, திரு. கா. சின்னசாமி, மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கா. சின்னசாமி இருக்கையில் இல்லை. அவருக்குப் பதிலாக திருமதி. க. பழனியம்மாள் கேட்கிறார்.

131—

மோகனூரிலிருந்து இராசிபுரம் வரை கூட்டுக் குடிநீர்த் திட்டம்.

*9983-ஏ—திரு. கா. சின்னசாமி: மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம் மோகனூரிலிருந்து இராசிபுரம் வரை கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலம் குடிநீர் வழங்கும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில் விவரம் என்ன?

1993 மார்ச் 18]

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு, உள்ளாட்சித்துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே

(அ) மோகனூரிலிருந்து இராசிபுரம் வரை கூட்டுச் குடி நீர்த் திட்டம் ஏதும் அரசின் ஆய்வில் இல்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

திருமதி க. பழனியம்மாள் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை என்று உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் கூறியிருக்கிறார்கள். ஆனால் இந்தத் திட்டமானது மோகனூர் பட்டணம் என்ற பெயரில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் நிறைவேறினால் சேந்தமங்கலம் தொகுதி வழியாக காளப்ப நாயக்கனபட்டி சேந்தமங்கலம் வழியாக வந்து இராசிபுரம் தொகுதியில் சில்லாந்தபுரம் பட்டணம் நாமகிரிப்பேட்டை ஆகிய ஊர்களுக்குக் குடிநீர் வசதி ஏற்படும் அப்படி குடிநீர் வசதி ஏற்படுத்துவதற்காக இந்தத் திட்டம் ஆய்வு செய்யப்பட்டு உள்ளதாக அறிகிறோம். எனவே இந்தத் திட்டத்தைக் பரிசீலனை செய்து அமல்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம் மோகனூருக்கும் இராசிபுரத்திற்கும் தனியாகக் கூட்டுக் குடிநீர்த் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால் இரு மாவட்டங்களுக்கும் பயன் கிடைக்கும் வகையில் தனித்தனியாக இரண்டு குடிநீர்த் திட்டங்களுக்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளன. லத்திய வாடியில் உள்ள கால்நடை மருத்துவக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி கழகம் மோகனூர்-நல்லிபாளையம் இடையே 37 குடியிருப்புகள் எருமைப்பட்டி பேரூராட்சி மற்றும் 27 குடியிருப்புகள் ஆகியவற்றுக்குக் குடிநீர் வழங்க சுமார் 630 இலட்சம் ரூபாய் செலவில் 7—5—1992இல் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

முற்பகல் 10–35

சேலம் மாவட்டத்திலே நெடுங்குளம் காட்டூர் அருகிலே காவிரி ஆற்றின் நீரை ஆதாரமாகக் கொண்டு 2 நகராட்சிகள் 9 பேரூராட்சிகள் மற்றும் 155 வழியோர கிராமங்களுக்கு குடிநீர் வழங்க 1986 இலட்சங்களுக்கு 26—4—1988லே ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் எல்.ஐ.சி. உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது. மோகனூரிலிருந்து இராசிபுரம் வரையில் தனியாக கூட்டுக் குடிநீர்த் திட்டம் எதுவும் ஆய்வில் இல்லை. ஆனால் மேற்கூறிய 2 திட்டங்களினால் மோகனூர் இராசிபுரம் மற்றும் அதன் அருகிலுள்ள எல்லாப் பகுதிகளும் பயனடையும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[1993 மார்ச் 18

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருமதி ப. சரஸ்வதி.

திருமதி ப. சரஸ்வதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே எங்களுடைய பகுதியில் ஆயிரம் அடிக்கு போர் போட்டாலும் 6 மாதத்தில் வற்றி விடுகின்ற காரணத்தால் இந்தக்கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாகத்தான் இராசிபுரம் சேந்தமங்கலம் போன்ற பகுதிகளுக்கு நிரந்தர குடிநீர் தீர்வு காண முடியும். அந்தப் பகுதியில் 2 கூட்டுக் குடிநீர்த் திட்டங்கள் ஆய்வில் இருந்தாலும் இந்த சேந்தமங்கலம் இராசிபுரம் பகுதிகளுக்குச் சென்று அடைய முடியவில்லை. ஏற்கெனவே தீட்டப்பட்டு இருக்கக்கூடிய கால்நடைக் கல்லூரியினுடைய கூட்டுக் குடிநீர்த் திட்டம் இன்னும் காலதாமதம் ஆகிக்கொண்டிருக்கிறது. அதை நிறைவேற்றக்கூடிய காலக் கட்டத்தில் இந்த கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அருகில் காவிரி ஆறு செல்லுகின்ற காரணத்தால் காவிரி ஆற்றிலிருந்து 15 கிலோ மீட்டர் வரை குடிநீர் எடுத்துக் குடித்துக் கொண்டிருக்கிறார்கள். மற்ற மக்கள் எங்களுக்கு மட்டும் எங்களுடைய தலைவியினுடைய ஆட்சியில் ஏன் தண்ணீர் கொடுக்கக்கூடாது என்று சட்டமன்ற உறுப்பினராகிய எங்களிடத்திலே வாதிடுகிறார்கள். சேந்தமங்கலம் சட்டமன்ற உறுப்பினர் இராசிபுரம் சட்டமன்ற உறுப்பினர் நான் அனைவரும் சேர்ந்து தங்களிடத்திலே வேண்டிக் கேட்டுக் கொள்வது கிராம குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்த டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய ஆட்சியில் செய்து நிறைவேற்றித் தருவார்களா என கனிவுடன் கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கூறிய 2 திட்டங்களும் 1994 ஆம் ஆண்டு இறுதிக்குள் நிறைவேற்றப்படும். நிறைவேற்றி முடிக்கிற தருவாயில் மாண்புமிகு உறுப்பினர் சொல்லுகிற மேற்கூறிய பகுதிகளும் இதிலே உள்ளடக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 132, திருமதி ஜெ. லோகாம்பாள், மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர்.

132 —

புள்ளம்பாடிக்குக் கொள்ளிடத்திலிருந்து குடிநீர் வழங்கும் திட்டம்

*10378 — திருமதி ஜெ. லோகாம்பாள் : மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா --

(அ) லால்குடி தொகுதியில் புள்ளம்பாடிக்குக் கொள்ளிடத்தில் இருந்து குடிதண்ணீர் கொண்டுவரும் திட்டம் எந்தநிலையில் உள்ளது ?

(ஆ) இத்திட்டம் எப்போது முடிவடையும் ?